மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்
2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 06-ம் நாள் திங்கட்கிழமை
அ.வ.எண். 94/20

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: காசி விஸ்வநாதன் தேதி : 06.10.25
வயது : த/பெ : முருகேசன்
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

---

<u>06.10.25 முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் 4 ம் வாதி மற்றும் வாதிகள் தரப்பு 1 ம் சாட்சி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து உள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். வழக்கின் விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியும்.

2. 21.01.1997 ம் தேதி என் தந்தைக்கு பாப்பாத்தி அம்மாள் மற்றும் நெல்லையப்பன் ஆகியோர் தாவா சொத்தினை பொறுத்து எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் அசலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 1 ஆகும். 20.10.2020 ம் தேதி வழக்கறிஞர் மூலம் என் தாயாரான 1 ம் வாதி முறப்பநாடு சார்பதிவாளருக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 2 ஆகும். 23.10.2020 ம் தேதி மேற்படி அறிவிப்பு சார்பு செய்யப்பட்டது என்பதற்கான அஞ்சல் துறையின் இணைய வழி நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 3 ஆகும்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.10.06 20:25:40 +0530

3. 27.03.2014 ம் தேதி தாவா சொத்தினை பொறுத்து பெறப்பட்ட வில்லங்கச்சான்றின் அசலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 4 ஆகும். 05.11.2020 ம் தேதி தாவா சொத்தினை பொறுத்து இணைய வழியில் பெறப்பட்ட வில்லங்க சான்றின் நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 5 ஆகும்.

**வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.10.06 20:25:45 +0530